2. This Government have also fixed maximum wholesale prices for the sale of paddy and rice throughout the State and have vested necessary powers in the Collectors, Revenue Divisional Officers, Grain Purchase Officers, etc., to enforce price control strictly and requisition the stocks from traders or others, who are selling paddy or rice at rates above the ceiling and distribute them at control rates.

* 906 *Q.*—Sri S. M. ANNAMALAI : *கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—*

1958-ம் ஆண்டில் முதல் தரம், இரண்டாம் தரம் அரிசியினுடைய சராசரி விலை என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The average wholesale prices of rice, first sort and second sort, during the year 1958 were Rs. 21·71 and Rs. 19·80 per maund respectively, while the retail prices were Rs. 23·89 and Rs. 21·44 respectively.

Sri A. A. RASHEED : Sir, is it a fact that the prices have gone up because of the Government's operating in the rice market in the North Arcot district?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : That is not so, Sir. But, that is perhaps the argument of the vested interests.

Sri S. M. ANNAMALAI : *சார், இப்பொழுது சர்க்கார் நிர்ணயித்துள்ள விலை எவ்வளவு ? இந்த விலை எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது ?*

The Hon. Sri M. BHAKTAVATSALAM : *சர்க்கார் அந்தந்த ரகங்களுக்கு ஏற்றாற்போல் விலையை நிர்ணயித்திருக்கிறது. இதுபற்றி ஒரு நோடிபிகேஷன் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அந்த விபரங்களை இப்பொழுது என்னிடம் இல்லை. பொதுவாக, விவசாயிகளுக்கும் கட்டுப்படியாகவேண்டும், வாங்குகிற ஏழை மக்களுக்கும் குறைந்த அளவில் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டையும் மனதில் வைத்துக்கொண்டு, மார்க்கட் நிலவரங்களையும், மற்ற ராஜ்யங்களில் உள்ள நிலவரங்களையும் பார்த்து இந்த விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன.*

Sri S. B. ADITYAN : May I know whether, by reason of the entry of the Government as a purchaser into the rice market, the commodity has become scarce and not readily available to the public?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I am quite well aware that some of the merchants who do not like this interference and want to be left alone to do business as they please create this artificial scarcity. The Government are dealing with that situation.

Sri S NAGARAJA MONIGAR : *மற்ற காரணங்கள் எல்லாவற்றையும் காட்டிலும் வியாபாரிகள் நாட்டில் எந்த நிலை இருந்தாலும்—பஞ்சம் இருந்தாலும் கூட இதுதான் தாங்கள் லாபம் அடைவதற்குரிய சமயம் என்று ஒருவித சூழ்நிலையை உண்டாக்கி—அதிக லாபத்திற்கு பொருள்களை விற்க முயற்சி செய்வது இதற்குக் காரணம் அல்லவா ?*

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Unfortunately that is the position with reference to some of the merchants. As I said, the Government are dealing with that situation.

20th March 1959]

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Is there any proposal before the Government to revise the price of rice in view of the disparity in the price between Andhra and Madras? If so, when is it likely to be finalised?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not admit that there is any disparity in price between Andhra and Madras. But certain cartage allowance and other such margins are allowed. When any specific representation is made with reference to a particular variety of rice, Government do look into it and if necessary they do alter the notification.

SRI A. A. RASHEED: When do the Government propose to take up State trading in foodgrains to bring down these prices?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The hon. Member is quite well aware that State trading cannot be taken up by particular State alone. It has to be taken up at an All-India level and the Centre has been examining the scheme. When the scheme is finalised, then it is for the States to step in.

SRI S. LAZAR: உணவு உற்பத்தியாளர்களுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலை என்ன? அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய விலை உயர்வு என்று அரசாங்கம் கருதுகிறதா? எந்த அடிப்படையில் அந்த விலை நிர்ணயிக்கப் படுகிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: எந்த அடிப்படையில் என்றால் வாங்கிச் சாப்பிடுகிறவர்களுடைய சக்திக்கு ஏற்றவாறு அந்த விலை இருக்கவேண்டும். ஆனால் உற்பத்தி செய்கிறவர்களுக்கும் கட்டுபடியாக வேண்டும். அதோடு இரண்டாவது ரகம் நெல் விலைகூட இன்று சில்லரை விலையில் அதிகமாகிக்கொண்டிருக்கிறது. அதைக் குறைக்கவேண்டும் என்பது அடிப்படை.

SRI S. M. ANNAMALAI: சர்க்கார் கொண்டு வந்திருக்கும் கொள்கை காரணமாக பஜாரில் அரிசி கிடைக்கவில்லை. ஆகவே உடனடியாக நியாய விலைக் கடைகளைத் திறக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பஜாரில் அரிசி கிடைக்காமல் இருக்கவேண்டும் என்று சிலர் நினைக்கிறார்கள். அதற்குத் தகுந்தாற்போலவும் சில ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். இதற்குத் தகுந்த நடவடிக்கைகள் சர்க்காரால் மேற்கொள்ளப்படும். ஆகையால் நியாய விலைக் கடைகளை அமைக்க வேண்டியதில்லை.

SRI G. GOMATHISANKARA DIKSHITAR: சர்க்கார் நிர்ணயித்திருக்கிற விலைக்குக் குறைவாகவோ, அதிகமாகவோ விற்று ஆனால் ரசீதை மாத்திரம் நிர்ணயித்துள்ள விலைப்படி போடுவதற்குள்ள முயற்சிகளை தடுக்க சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: எந்தச் சட்டத்தைப் போட்டாலும் அதைத் தவிர்ப்பதற்குறிய முயற்சிகள் அங்கும் இங்குமாகத்தான் நடைபெறுவது உண்டு. ஆனால் இதைத் தடுப்பதற்கு சர்க்காரால் என்ன என்ன வழிகளில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியுமோ அந்த அந்த வழிகளில் எல்லாம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

SRI T. SAMPATH: சர்க்கார் விலை கட்டுப்பாடு கொண்டு வந்திருந்தும், தஞ்சாவூர் ஜில்லா நீங்கலாக மற்ற ஜில்லாக்களில் விலை உயர்வாக இருப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்க விரும்புகிறேன்.

[20th March 1959

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தஞ்சாவூர் ஜில்லா நீங்கலாக மற்ற ஜில்லாக்களில் விலை உயர்வாக இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. இன்னும் விலை நிரந்தரமாக ஸ்திரப்படவில்லை. இந்த உத்தரவை பிப்ரவரி 2-ம் தேதிதான் கொண்டு வந்திருக்கிறோம். இன்னும் சர்க்கார் கொள்முதல் செய்வது தீவிரமாக மேற்கொள்ளப்பட்டால் இந்த விலை பணிந்துவிடும் என்று எதிர்பாக்கப் படுகிறது.

SRI N. K. PALANISAMI : ஆடுதுறையில் விளைகிற நெல் அத்தனைக்கும் ஒரு விலை என்று போதுமான விலை சரியாக நிர்ணயிக்கப்பட வில்லை என்று சொல்லப்படுகிறது. மட்டரகம், நடுத்தரம், பைன் என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து நெல்லுக்கு விலை நிர்ணயிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுவரையில் ரகங்கள் என்ன என்ன வகையாகப் பிரிக்கப்பட்டு உருவாகி வந்திருக்கின்றதோ அப்படியே தான் பிரிக்கப்படவேண்டும். நமக்காக இரண்டு ரகம் போதும், மூன்று ரகம் போதும் என்று பிரித்தால் நன்றாக இருக்காது.

SRI K. B. S. MANI : சர்க்கார் நெல் விலை கட்டுப்பாடு கொண்டு வந்திருப்பதின் காரணமாக விவசாயிகளுக்கும் லாபம் கிடைக்காமல், சில்லரை வியாபாரிகளுக்கும் லாபம் கிடைக்காமல் ரைஸ் மில் முதலாளிகள் லாபம் அடைகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதன்படி கட்டைச் சம்பா நெல் ஒரு மூட்டை அரிசி 38½ ரூபாயாக தஞ்சை ஜில்லாவில் விற்கப்படுகிறது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மில்காரர்களுக்கு கமிஷனும், அரைப்பதற்குக் கூலியும் தான் கிடைக்கும். அவர்களுக்கு மட்டும் அதிகமாக லாபம் கிடைக்கக்கூடும் என்று தெரியவில்லை.

SRI M. JAGANNATHAN : May I know whether there are fair price shops in existence now selling rice? If so, what action do the Government propose to take in order to see that rice is sold at fair price in these fair price shops?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There have been fair price shops selling wheat and not rice. Some time ago, when prices were going up, Collectors were asked to arrange informally in co-operation with some of the wholesale merchants for the opening of informal fair price shops and the merchants were running such shops. Now, I may tell the hon. Member that the prices obtaining now are more or less at the same level as prices at which rice was sold at these informal fair price shops.

SRI K. PERIANNAN : தலைவர் அவர்களே, விவசாயத்தில் ஈடுபட்டு விவசாயத்தை அபிவிருத்தி செய்கின்றவர்கள் பெரும்பாலும் ஏழை விவசாயிகள். ஆனால் அவர்களுக்கு விவசாயம் செய்வதற்கு வேண்டிய கருவிகள் குறைந்த விலையில் கிடைக்கவில்லை. அவர்களுக்குத் தேவையான இதர பொருள்களின் விலை ஏற்றத்திற்கு தக்கப்படி இந்த நெல் விலையை நிர்ணயிக்க சர்க்கார் முயற்சி செய்யுமாவென்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி எத்தனையோ முறை பேசப்பட்டிருக்கிறது. விவாதிக்கப்பட்டிருக்கிறது. விலை நிர்ணயிக்கும்போது வாங்கிச் சாப்பிடுகிறவர்களுடைய நிலைமையையும் கவனிக்கவேண்டும். அது நியாயமான விலையாகவும் நிர்ணயிக்கவேண்டியிருக்கிறது.

20th March 1959]

SRI S. M. ANNAMALAI : தஞ்சை மாவட்டத்தில் மட்டும் தீவிர கொள்முதல் செய்யப்படுகிறது. இதன் காரணமாக வியாபாரிகளால் வாங்க முடியவில்லை. மற்ற மாவட்டங்களிலும் தீவிரக் கொள்முதல் செய்ய முயற்சிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எல்லா மாவட்டங்களிலும் கொள்முதல் செய்கிற உத்தேசம் தான். தஞ்சை மாவட்டத்தில் அரிசி அதிகமாக இருப்பதால் அங்கே கொள்முதல் தீவிரமாகத் தெரிகிறது. வேறு சில மாவட்டங்களிலும் இப்படித்தான் செய்யப்படுகிறது. மற்ற இடங்களிலும் கவனிக்கப்படும்.

SRI V. K. KOTHANDARAMAN : அரிசியின் விலை உயர்வுக்குக் காரணம் பல பெரியவர்கள் பதுக்கி வைத்திருப்பதுதான் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? ஆகவே அதைக் கண்டுபிடித்து கொள்முதல் செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சாதாரணமாக அவ்வாறு பெரிய நிலப்பிரபுக்களால் பதுக்கப்பட்டிருக்கிறது. அதனுல் விலை உயர்ந்துவிட்டது என்று சொல்வதற்கில்லை. அதிக விலை உயராதா என்று வைத்துக்கொண்டிருக்கிறுர்கள். அவர்கள் அப்படி விற்காமல் வைத்துக் கொண்டிருப்பதை ரிக்குவிசிஷன் செய்வதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

Catherine Water-falls in Ooty

* 907 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to improve the Catherine Water-falls in Ooty to attract the tourists?

THE HON. SRI C. SUBRAMANIAM : No Sir.

SRI J. MATHA GOWDER : இந்த காதிரைன் வாடர் பால்ஸ் அபிவிருத்திக்கு 7 லட்சம் ஒதுக்கியிருக்கிறுர்கள். இதில் இப்போது ரோடு போடுவதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறுர்கள். ஆனுல் அந்த ரோடை அதன் பக்கமாகத்தான் போடப் போகிறுர்கள். ஒரு மைல் தூரம் தள்ளியே நின்றுவிடும். ஆகவே அந்த ரோடை விஸ்தரிக்க அதிகமான தொகை ஒதுக்குவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது உதகமண்டலத்தில் இயற்கைக் காட்சிகளைப் பாதுகாப்பதற்கு வேண்டி ஏழேகால் லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ப்ளாக்டாப்புக்காக ஒரு லட்சத்தி முப்பதாயிரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது நீர்வீழ்ச்சியை மாற்றி அமைக்கும் திட்டம் இல்லை.

Stree Seva Mandir, Santhome

* 908 *Q.*—SRI K. B. S. MANI (on behalf of Sri P. G. Manickam) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை செந்தோமிலே உள்ள (Stree Seva Mandir) ஸ்ரீ சேவா மந்திர் ஆதரவின் கீழ் Training in Handicrafts for women பயிற்சிச் சாலை யானது எப்போது ஆரம்பிக்கப்படும் ?

(ஆ) 1958–59-ம் வருஷத்திலே இப்பயிற்சிச் சாலையின் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Training Centre for the manufacture of soft dolls and utility articles from plantain and other fibres in the Stree Seva Mandir, started functioning from 1—4—1958.